வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ஒ.மு.எண்.5129/ ஆ4 / 2022 நாள். 05.12.2022

பொருள் பள்ளிக்கல்வி–ஆரோவில் ஃபவுண்டேஷன் – இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைவதை குறிக்கும்விதமாக (சுதந்திரத் திருநாள் அமுதப்பெருவிழா (ம) மகான் ஸ்ரீ அரவிந்தரின் 150–வது பிறப்பு ஆண்டுவிழா ஆகியவற்றின் நினைவாக , 6 முதல் 12–ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கான தேசிய (ம) சர்வதேச அளவில் கட்டுரைப் போட்டிகள் சார்பான விவரம் –தெரிவித்தல் –சார்பு

பார்வை 1. செயலர் , ஆரோவில் ஃபவுண்டேஷன் அவர்களின் கடித நாள் 24.11.2022

==============

மேற்காணும் பொருள் சார்பாக ஆரோவில் ஃபவுண்டேஷன், இந்திய சுதந்திரத்தின் 75–வது ஆண்டு விழா (சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா) மற்றும் ஸ்ரீ அரவிந்தரின் 150–வது பிறப்பு ஆண்டுவிழா ஆகியவற்றை முன்னிட்டு, தேசிய (ம) சர்வதேச அளவில் (தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் ) 6ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டிகள் மற்றும் குறும்படப் போட்டிகள் அறிவித்துள்ளது. இந்திய சுதந்திரத்தின் 75 ஆண்டுகள் மற்றும் ஸ்ரீ அரவிந்தரின் 150–வது பிறந்த நாள் கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக மாணவர்களுக்கான இந்தப் போட்டிகள் நடத்தப்படவுள்ளது.

பள்ளி அளவிலான போட்டிகளுக்கு முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே ரூ.75,000 ரூ.50,000/– மற்றும் ரூ.25,000 ரொக்கப் பரிசும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது .

பள்ளி மாணவர்களின் கட்டுரை அல்லது குறும்படங்களை (ஆங்கிலம் அல்லது தமிழ் மொழி )எட்டு வகைகளில் சமர்பிப்பதர்ககான மின்னஞ்சல் முகவரிகளின் பட்டியல்

1. தமிழ் வழி பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை சமர்பிப்பு essay.schools.tamil@auroville.org.in
2. ஆங்கில வழி பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை சமர்பிப்பு essay.schools.english@auroville.org.in

மேலும் போட்டிகள் தொடர்பான இணைக்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை பின்பற்றி மாணவர்களுக்கு தெரிவிக்குமாறு அனைத்து வகை பள்ளித்தலைமை ஆசிரியர்கள்(ம) மெட்ரிக் பள்ளி முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பார்வையின் காண் கடிதம்
(ம)வழிமுறைகள்

முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்,
அனைத்து வகை தலைமை ஆசிரியர்கள் (ம) மெட்ரிக் பள்ளி முதல்வர்கள்,வே.மா.

நகல்:
1. வேலூர் மாவட்ட கல்வி அலுவலர்(இடைநிலை/ தனியார்) தகவலின் பொருட்டு.
2. செயலர், ஆரோவில் ஃபவுண்டேஷன் பவன், ஆரோவில்–605101.தகவலுக்காக அனுப்பலாகிறது.